டெல்லி செல்லும் தமிழக முதல்வர்

# திருப்பூர் தொழில்துறையினரை சந்திக்காதது ஏமாற்றம்!

## “டெல்லி பயணம் தங்களுக்கு சாதகமற்றதாகவே இருக்கும்” தொழில்துறையினர் வேதனை!

புதுடெல்லி, மே 28-

டெல்லி செல்லும் தமிழக முதல்வர் திருப்பூர் தொழில்துறையினரை சந்திக்காதது ஏமாற்றம் அடைந்திருப்பதாகவும், மேலும் டெல்லி பயணம் தங்களுக்கு சாதக மற்றதாகவே இருக்கும்” என்று தொழில்துறையினர் வேதனையடைந்துள்ளனர்.

தமிழக முதலமைச்சராக ஜோசப் விஜய் பதவியேற்று கொண்டதை தொடர்ந்து, அரசு முறை பயணமாக நேற்று முதன் முறை யாக டெல்லி சென்று ஒன்றிய பிரதமர் மற்றும் ஒன்றிய அமைச்சர்களை சந்திக்க உள்ளார். மாநில வளர்ச்சி சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்க முதலமைச்சர் டெல்லி செல்லும் வேளையில், அதற்கு முன்னதாக அவர் தங்களை நேரில் சந்தித்து தங்கள் துறை சார்ந்த கோரிக்கைகளை பெறாதது திருப்பூர் பின்னலாடை தொழில் துறையினர் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் மிக முக்கிய ஏற்றுமதி நகரமாகவும், பல்லாயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் மையமாகவும் விளங்கும் திருப்பூரின் தொழில் தேவைகளை, மாநில அரசோ அல்லது துறை சார்ந்த அமைச்சர்களோ நேரில் கேட்டறிந்து, இந்த டெல்லி சந்திப்பில் வலியுறுத்தியிருக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தொழில் நகரத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. அப்படி செய்திருந்தால், தற்போது கடுமையான நெருக்கடியை சந்தித்து வரும் தொழில் துறையினருக்கு அது பெரும் நம்பிக்கையை தந்திருக்கும் என பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில் துறையினர் தெரிவிக்கின்றனர்

தற்போது நூல் விலை ஏற்றம், மின் கட்டண உயர்வு. சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, பருத்தி தட்டுப்பாடு, போர்ச்சூழலால் உயர்ந்துள்ள மூலப்பொருட்களின் விலை மற்றும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு போன்ற பல்வேறு இக்கட்டான காரணங்களால் திருப்பூரின் சிறு, குறு மற்றும் நடுத்தர பின்னலாடை நிறுவனங்கள் வாழ்வா? சாவா? என்றகடுமையான போராட்டத்தை எதிர்கொண்டு வருகின்றன. இத்தகைய சூழல் நிலவிய போதிலும், புதிய அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை முதலமைச்சரோ அல்லது தொழில் சார்ந்த அமைச்சர்களோ தங்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்காதது தொழில்துறையினருக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. திருப்பூரின் பொருளாதார பிரச்சினைகளையும், தொழிலாளர்களின் வாழ்வாதார சிக்கல்களையும் டெல்லி மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வுகளை பெற்றுத்தர வேண்டிய கட்டாயம் மாநில அரசுக்கு உள்ள நிலையில், எந்தவொரு கருத்துக்கேட்பு கூட்டமும் நடத்தாமல் முதலமைச்சர் டெல்லிக்கு சென்றுள்ளது தங்களுக்கு பெரும் வேதனையளிப்பதாக தொழில் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

இது குறித்து திருப்பூர் தொழில் துறையினர் கூறுகையில், “இந்தியாவின் ஒட்டுமொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 68 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை திருப்பூர் வழங்கி வருகிறது. இங்கு தமிழகம் மட்டுமன்றி 20க்கும் மேற்பட்ட மாநிலங்களை சேர்ந்த பல லட்சம் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பெற்று வருகின்றனர். பல்வேறு மாநிலங்களின் பொருளாதார சுழற்சிக்கு காரணமான இத்தொழில் தற்போது சந்தித்து வரும் சவால்கள் குறித்து, தேர்தல் சமயத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் நேரில் வந்து கோரிக்கைகளை பெற்று சென்றனர்.

ஆனால், வெற்றி பெற்று புதிய அரசு அமைந்த பிறகு, இத்துறைக்கென நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் யாரும் இதுவரை தங்களை சந்தித்து கோரிக்கைகளை பெறவில்லை. இந்த சூழ்நிலையில், டெல்லி செல்லும் முன் முதலமைச்சர் தங்கள் துறை சார்ந்த அவசர தேவைகளை கேட்டு பெற்று, அதையும் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தியிருந்தால் ஏதேனும் நிவாரணம் கிடைக்க வாய்ப்பாக இருந்திருக்கும். ஆனால், தங்களின் கோரிக்கைகளை மாநில அரசே இன்னும் பெறாத சூழலில், முதலமைச்சரின் டெல்லி பயணம் தங்களுக்கு சாதகமற்றதாகவே இருக்கும்” என்றனர்.

மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் அரசின் மாண்பையும்

# ரகசிய காப்பு பிரமாணத்தையும் மீறும் அமைச்சர்கள்

## மக்கள் பிரதிநிதிகள் அரசு பணிகளில் சினிமா பாணியில் ரீல்ஸ்!

சென்னை, மே 28-

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதின் விளைவாக அண்மைக்காலமாக அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முதல் சென்னை தலைமைச் செயலகம் வரை தங்களின் அதிகாரப்பூர்வ ஆய்வு கூட்டங்கள் மற்றும் அரசு பணிகளை வீடியோவாக பதிவு செய்து, அதற்கு திரைப்பட பின்னணி இசை மற்றும் பாடல்களை வைத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக பதிவிடும் கலாசாரம் பரவலாக அதிகரித்து வருகிறது. மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் அரசு இயந்திரத்தின் மாண்பையும், ரகசிய காப்பு பிரமாணத்தையும் மீறும் வகையில் இந்த செயல்பாடுகள் அமைந்திருப்பதாக சமூக ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அரசு அலுவலகங்கள் மக்களின் வாழ்வாதார கோரிக்கைகளும், மாநிலத்தின் மிக முக்கிய ரகசிய ஆவணங்களும் கையாளப்படும் உயர் பாதுகாப்பு மற்றும் கண்ணியம் நிறைந்த இடங்களாக உள்ளது. இந்நிலையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைச்சர்கள் தங்களின் மேஜைகளில் இருக்கும் ரகசிய அரசாணைகள், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் ஆகியவற்றின் பின்னணியில் நின்று கொண்டு, தங்களின் சுய விளம்பரத்திற்காக மாஸ் காட்டும் சினிமா வசனங்கள் மற்றும் பாடல்களுடன் வீடியோக்களை எடிட் செய்து வெளியிடுவது, அவர்கள் பதவியேற்கும் போது எடுத்துக் கொண்ட ரகசிய காப்பு பிரமாணத்தை மீறும் செயலாகும் என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமைச்சர்கள் தங்களின் சொந்த கட்சி நிகழ்ச்சிகளையோ அல்லது

அரசியல் மேடை பேச்சுகளையோ இதுபோன்ற சினிமா பாடல்களுடன் ரீல்ஸ் செய்து பதிவிட்டால் அதில் பெரிய அளவில் தவறில்லை. ஆனால், அதிகாரப்பூர்வ அரசு ஆய்வு கூட்டங்களில் பங்கேற்கும் மாவட்ட ஆட்சியர் முதல் அரசு ஊழியர்கள் வரை அனைவரையும் தங்களின் வீடியோவிற்குள்கொண்டு வந்து அவர்களின் அனுமதியின்றி தங்களின் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிடுகின்றனர்.

இவர்களின் செயல் பல அரசு அதிகாரிகளையும் உயர் அதிகாரிகளையும் சங்கடத்திற்குள்ளாக்குகிறது. தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, இயற்கை வளங்கள்துறை அமைச்சர் பிரபு உள்ளிட்டோர் தங்களது சமூக வலைதளப்பக்கத்திலேயே அமைச்சர்கள் தங்களது நண்பர்கள், கட்சியினரின் இது போன்ற ரீல்ஸ் வெளி யிட்டுள்ளனர். மேலும், சில சமூக வலைதள கணக்கு மூலம் ரீல்ஸ் வீடியோக்களை பகிர்ந்து வருகின்றனர். அமைச்சர்களாகவும், பொறுப்பு மிக்க மக்கள் பிரதிநிதிகளாகவும் மக்கள் தங்களை தேர்ந்தெடுத்து மிக உயரிய பொறுப்பில் அமர வைத்த பிறகும் சினிமா மோகத்தில் இருந்து அவர்கள் வெளி வராமல் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், “சமூக வலைதள பயன்பாடுகள் இன்று மிகப்பெரும் பலமாய் மாறியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் எந்த வித கட்டுபாடும் இல்லாமல் சர்வ சாதாரணமாக நாட்டின் மிக உயர்ந்த அரசு அலுவலகமான தலைமை செயலகம், மாவட்டத்தின் முதன்மை அலுவலகமான மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் எளிதாக வீடியோ எடுத்து ரீல்ஸ் பதிவிடுவது தவறான முன்னுதாரணமாகி விடும். மக்கள் பிரதிநிதிகள் தங்களின் ஆய்வு பணிகளையும், திட்டங்களையும் மக்களுக்கு தெரியப்படுத்துவதில் தவறில்லை. ஆனால், அதனை அதிகாரப்பூர்வ தகவலாக, செய்தியாக தெரியப்படுத்தலாம்.

அதனை தவிர்த்து, சினிமாத்தனமான காட்சிகளாக மாற்றுவது அரசு நிர்வாகத்தின் நம்பகத்தன்மையை சீர்குலைப்பதாக அமையும். எனவே, மாநிலத்தின் முதலமைச்சர் தங்கள் அவையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு தகுந்த அறிவுரை வழங்க வேண்டும்” என்றனர்.

நீதிமன்ற உத்தரவு : முன்னதாக, கடந்த 2022ம் ஆண்டு அரசு அலுவலக வேலை நேரத்தில் ஊழியர்கள் மொபைல் போன் பயன்படுத்துவது குறித்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அரசு அலுவலகங்களுக்குள் ஊழியர்கள் மொபைல் போன் பயன்படுத்துவதும், உள்ளே நடப்பதை வீடியோ எடுப்பதும் கடுமையான நடத்தை விதிமீறல் என்று உத்தரவை பிறப்பித்திருந்தது. உயர் நீதிமன்றம் அரசு அலுவலர்களுக்கு இத்தகைய கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ள நிலையில், அரசை நிர்வகிக்க பொறுப்பேற்றுள்ள அமைச்சர்களே அதனை மீறி வருவது பொதுமக்களுக்கு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் அறிவிப்பின்படி கள ஆய்வு கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

**திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு - 30.05.2026**
**களஆய்வுக் குழு - எஸ்.ஜோயல், எ.வ.வே.கம்பன்**

| நேரம் | இடம் | ஒன்றியம்/நகரம்/பேரூர் |
|---|---|---|
| காலை 10,00 | காந்திமதி கோல்டன் பேலஸ் சிங்கம்புணரி | எஸ்.புதூர், சிங்கம்புணரி வடக்கு, சிங்கம்புணரி தெற்கு, சிங்கம்புணரி பேரூர் |
| மாலை 3.00 மணி | திருப்பத்தூர் - செந்தாமணி திருமண மண்டபம் | திருப்பத்தூர் வடக்கு,திருப்பத்தூர் தெற்கு, திருப்பத்தூர் பேரூர், நெற்குப்பை பேரூர் |
| மாலை 5.00 மணி | வெள்ளாளர் திருமணமண்டபம் குன்றக்குடி | கல்லல் மேற்கு, சாக்கோட்டை மேற்கு கானாடுகாத்தான் பேரூர் , பள்ளத்தூர் பேரூர், கோட்டையூர் பேரூர் |
| **காரைக்குடி சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு 31.05.2026** **கள ஆய்வுக்குழு - எஸ்.ஜோயல், எ.வ.வே.கம்பன்** | | |
| காலை 10.00 மணி | SMG திருமண மஹால் தேவகோட்டை | கண்ணங்குடி,தேவகோட்டை தெற்கு, தேவகோட்டை வடக்கு,தேவகோட்டை நகர் |
| மாலை 3.00 மணி | நாச்சியார் மஹால் புதுவயல் | சாக்கோட்டை கிழக்கு, கண்டனூர் பேரூர், புதுவயல் பேரூர் |
| மாலை 5.00 மணி | கலைஞர் பவள விழா மாளிகை காரைக்குடி | காரைக்குடி மாநகர் |
| **சிவகங்கை சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு 01.06.2026** **கள ஆய்வுக்குழு - எஸ்.ஜோயல், எ.வ.வே.கம்பன்** | | |
| காலை 10.00 மணி | ராயல் மஹால் சிவகங்கை | சிவகங்கை வடக்கு, சிவகங்கை தெற்கு சிவகங்கை மேற்கு மானாமதுரை வடக்கு சிவகங்கை நகர் |
| மாலை 3.00 மணி | AS கார்டன் காளையார்கோவில் | காளையார்கோவில் கிழக்கு காளையார்கோவில் தெற்கு காளையார்கோவில் வடக்கு கல்லல் கிழக்கு நாட்டரசன்கோட்டை பேரூர் |
| **மானாமதுரை சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு 02.06.2026** **கள ஆய்வுக்குழு - எஸ்.ஜோயல், எ.வ.வே.கம்பன்** | | |
| மாலை 5.00 மணி | மருதுபாண்டியர் திருமண மண்டபம் திருப்புவனம் | திருப்புவனம் கிழக்கு, திருப்புவனம் மேற்கு திருப்புவனம் தெற்கு, திருப்புவனம் பேரூர் |
| மாலை 3.00 மணி | அனுசியா மஹால் மானாமதுரை | மானாமதுரை மேற்கு,மானாமதுரை கிழக்கு மானாமதுரை நகர் |
| காலை 10.00 மணி | MS மஹால் புதூர் இளையான்குடி | இளையான்குடி கிழக்கு, இளையான்குடி மேற்கு ,இளையான்குடி தெற்கு, இளையான்குடி வடக்கு, இளையான்குடி பேரூர் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 26.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

‘அம்மா உணவகம்’ எந்த துறையின் கீழ் வருகிறது என தெரியாமல்

# சோசியல் மீடியா ரீல்ஸ் கன்டென்ட்டுகளுக்காக அத்துமீறல்!

## திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி எம்,எல்,ஏ., பாலமுருகனுக்கு கண்டனம்!

திருப்பூர், மே 28-

திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ., பாலமுருகன் அம்மா உணவகம் எந்த துறையின் கீழ் வருகிறது என தெரியாமல் அம்மா உணவக நிர்வாகத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகாரிகளை அவர் நேரில் அழைத்து வெறும் சோசியல் மீடியா ரீல்ஸ் கன்டென்ட்டுகளுக்காக மருத்துவர்களை அலைக்கழிக்கும் வகையில் ஆலோசனை மேற்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

திருப்பூர் பெரிச்சிபாளையம் பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. பாலமுருகன் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அம்மா உணவக நிர்வாகத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகாரிகளை அவர் நேரில் அழைத்து ஆலோசனை மேற்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையைப் பொறுத்தவரை மருத்துவ மனை வளாகத்திலேயே உள் நோயாளிகளுக்கு 3 நேரமும் உணவுகள் தயார் செய்யப்பட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச்சூழலில், அம்மா உணவக குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளை அணுகி ஆலோசிப்பதற்கு பதிலாக, மருத்துவ கல்லூரி அதிகாரிகள், மருத்துவர்களை திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ., பாலமுருகன் நேரில் வரவழைத்து ஆலோசனை நடத்தினார். மருத்துவமனை நிர்வாகத்தினர், அம்மா உணவக செயல்பாடுகள் எங்களின் கட்டுப்பாட்டில் இல்லை, அது மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது என கூறினர். அதையும் பொருட்படுத்தாத எம்.எல்.ஏ., பாலமுருகன் மருத்துவர்களின் அவசர பணி நேரத்தை கருத்தில் கொள்ளாமல், அவர்களை தன்முன்னே நிறுத்தி அம்மா உணவகம் தொடர்பாக நீண்ட ஆலோசனையும், அறிவுரைகளும் வழங்கியுள்ளார். அம்மா உணவகம் எந்த துறையின் கீழ் வருகிறது என தெரியாமல் வந்து சம்பந்தம் இல்லாத மருத்துவர்களிடம் ஆலோசனை நடத்தியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

வெறும் சோசியல் மீடியா ரீல்ஸ் கன்டென்ட்டுகளுக்காக மருத்துவர்களை அலைக்கழிக்கும் வகையில் இவரின் செயல்பாடு அமைந்திருப்பதாக பொது மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும், எந்த துறையின் கீழ் அம்மா உணவகம் வருகிறது என்பது கூட தெரியாமல் எம்.எல்.ஏ., பாலமுருகன் ஆலோசனை நடத்தியதை நெட்டிசன்கள் கிண்டலடித்து வருகின்றனர்.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, கூடலூர் மற்றும் குன்னூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான “களஆய்வு” மாவட்டச் செயலாளர் கே.எம். ராஜூ அறிவிப்பின்படி கீழ்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி நடைபெற உள்ளது.

தலைமைக் கழக பிரதிநிதிகளாக, கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, கழக சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| நாள் | நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 28.05.2026 வியாழக்கிழமை | காலை 9.30 மணி மதியம் 3 மணி | கூடலூர் | பாம் ரிசார்ட், மாக்கமூலா |
| 29.05.2026 வெள்ளிக்கிழமை | காலை 9.30 மணி மதியம் 3 மணி | உதகை | கலைஞர் அறிவாலயம், உதகை |
| 30.05.2026 சனிக்கிழமை | காலை 9.30 மணி மதியம் 3 மணி | குன்னூர் | ஹோட்டல் புளு ஹில்ஸ் கூட்ட அரங்கம், குன்னூர் |

மேற்கண்ட தேதிகளில் காலை 9.30 மணியளவில் நடைபெறும் ஆய்வின்போது அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளும், மதியம் 3 மணிக்கு அணிகளின் நிர்வாகிகளும் கலந்து கொள்வீர்!

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 26.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். என்.இராஜேஷ்குமார் எம்.பி. அறிவிப்பின்படி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ராசிபுரம், நாமக்கல், சேந்தமங்கலம் ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக்கூட்டம் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் கழக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் மன்னை சோலைராஜா ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| நாள்/ நேரம் | சட்டமன்ற தொகுதி | இடம் |
|---|---|---|
| 30.05.2026 காலை 9.00 மணி | சுமங்கலி திருமண மண்டபம் (அரிமா சங்கம்) | ராசிபுரம் |
| 31.05.2026 காலை 9.00 மணி | இனமான பேராசிரியர் அரங்கம், மாவட்ட கழக அலுவலகம் | நாமக்கல் |
| 01.06.2026 காலை 9.00 மணி | சௌபாக்கியம் திருமண மண்டபம் -சேந்தமங்கலம் | சேந்தமங்கலம் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 27.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.